16.06.2026 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஓ.எஸ்.எண். 43 /2016 ) திரு.சுப்பாராஜ்.

5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை–

1) எனது தகப்பனார் பெயர் என்னவென்றால் திரு.பங்காருசாமி. எனது தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் பெயர் சொல்ல முடியுமா என்றால் முடியும். கந்தசாமி, பரசுராமன், பெருமாள்சாமி, எனது தகப்பனார் பங்காருசாமி, சீனிவாசன், அப்பாசாமி, நாராயணசாமி, தனலட்சுமி ஆகியோர்கள் எனது தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் ஆவார்கள். எனது தகப்பனாரும் அவருடன் உடன் பிறந்தவர்களும் தற்சமயம் உயிருடன் இருந்து வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எனக்கு ஆதரவாக வழக்கு நடத்தக்கூடிய வாதிகளில் யார் யார் என்றும் அவர்கள் யாருடைய வாரிசுகள் என்றால் கந்தசாமி வாரிசுகள் தவிர மற்ற எனது தகப்பனாரின் உடன்பிறந்தவர்களின் வாரிசுகள் எனக்கு ஆதரவாக உள்ளார்கள். எனது தந்தையின் உடன்பிறந்த சகோதரி தனலட்சுமி 1ம்பிரதிவாதி என்றால் சரிதான். தனலட்சுமி மகன்கள் தான் 12,13 பிரதிவாதிகள் என்றால் சரிதான். தாவாச்சொத்து ஆதியில் எனது தகப்பனார் மற்றும் அவருடைய உடன்பிறந்த சகோதர, சகோதரியின் தகப்பனரான சுப்பா நாயக்கருக்கு பூர்வீகமாகப் பாத்தியப்பட்டசொத்து என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
16.06.2026.